

# பார்க்கவ குலத்தின் தோற்றமும் வரலாறும்

## பார்க்கவகுல சங்கத்தின் 100 ஆண்டு கால வளர்ச்சியும்

பார்க்கவகுல சங்கம் தோன்றியதன் 100-ஆம் ஆண்டு விழாவினையும், பார்க்கவகுல முன்னேற்ற சங்க 2-ஆம் ஆண்டு விழாவினையும் ஒன்றாக இணைத்து 2012 ஏப்ரல் 28ல் விழுப்புரம் மாவட்டம் - உளுந்தூர்பேட்டையில் மிகச் சிறப்பாக கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்பட்டு, பல லட்சம் பார்க்கவச் சொந்தங்கள் அதில் பங்கேற்று, சிறப்பான வகையில் மாநாடு நடந்தது. அதில் வெளியிடப்பட்ட மாநாட்டு சிறப்பு மலரின் இக்கட்டுரையில் பார்க்கவகுலம் தோன்றிய வரலாற்றையும், 100-ஆண்டுகளுக்கு முன் பார்க்கவகுல சங்கம் தோன்றிய வரலாறு, பின் வெவ்வேறு தலைவர்களின் காலகட்டங்களில் சங்கம் எவ்வாறு வளர்ச்சி கண்டது என்பதனையும் காணலாம்.

நாட்டில் மனித சமூகம் தோன்றிய காலத்தில் மக்கள் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என நிலத்தின் அடிப்படையில் வாழத்தொடங்கினர். அம் மக்கள், பிற்காலங்களில் குலத்தின் அடிப்படையில் அழைக்கப்பட்டனர். அக்காலத்தில்தான் குலம், வம்சம், கோத்திரம், ஜாதி என காலப்போக்கில் தோன்றின. இயற்கையோடு வாழ்ந்த காரணத்தினால், பார்க்கவன், பகலவன், வெய்யோன், சூரியன், ஞாயிறு என பல பெயர்களைக் கொண்டிருந்தனர். சூரிய குலத்தில் தோன்றியவரே பார்க்கவர்கள் என வரலாறு கூறுகிறது. பார்க்கவன் என்றால் சுக்கிரன். சுக்கிரன் சூரியனின் புத்திரன் ஆவார். அவ்வியற்கை பெயராலேயே ''பார்க்கவ குலம்'' எனக் குலப்பெயர் உருவானது.

### பார்க்கவ குலத்தின் முன்னவர்கள் மலையமான் திருமுடிக்காரியும் - மன்னர் பாரியும்

புராணக் கதைப்படி குக முனிவரின் வேள்வியால் பச்சைக் குதிரையுடன் 16-வயது வீரன் தோன்றியதாகவும், தேவர்களுக்கு இடையூறு செய்து வந்த காரண்டன், வல்லூரன் என்ற அசுரர்களை கடும் போரிட்டு கொன்றதாகவும், ஒரு கணத்தில் தமது பச்சைக் குதிரையில் சுற்றி வந்த நாடு முழுவதையும் அவரது அரசாட்சிக்கு பட்டாபிஷேகம் செய்து வைத்ததாகவும், அவர்தான் தெய்வீகன்' எனவும் குறிக்கப்பட்டார். கடையேழு வள்ளல்களில் ஒருவரான காரி எனும் குதிரையை உடைய மலையமான் திருமுடிக்காரியையே 'தெய்வீகன்' என்பாருமுண்டு. இவனை அடக்கி, இவனது குதிரையை பறிக்க எண்ணி பலமுறை தோல்வியுற்றனர் தமிழ் மூவேந்தர்கள். அவனது வீரத்தினை மெச்சி, சேர-சோழ-பாண்டிய மன்னர்கள் மூவரும் அவர்தம் அருந்தவப் புதல்வியராகிய பத்மாவதி, சண்முகமாலை, காஞ்சன மாலை எனும் முக்கன்னியர்களையும் தெய்வீகனுக்கு மணம் செய்து கொடுத்தனர்.

அதன்பின் பண்டைய 7 மாநகரப் பேரரசு நகரங்களான காசி, மாயா, மதுரா, அயோத்தி, அவந்தி, துவாரகா, காஞ்சி ஆகியவற்றை ஆண்ட வேந்தர்கள் ஏழு பேர்களையும் போரில் வெற்றிகொண்டு, அவர்களின் 7 புதல்வியரையும் காணிக்கையாகப் பெற்று தெய்வீகன் மணந்து வந்தார். அதற்குப்பின் ஔவையாரின் கோரிக்கையினை ஏற்று கபிலர் வளர்ப்பில் இருந்துவந்த பாரியின் மகள்களான அங்கவை, சங்கவை ஆகிய இருவரையும் மூவேந்தர்கள் முன்னிலையில் மணந்தான். தொடர்ந்து 18 தேச மன்னர்களை வெற்றிகொண்டு தெய்வீக நரசிங்க ராஜ உடையார் என பட்டம் பெற்று சக்கரவர்த்தியானார். அதன் காரணமாகவே ''உடையார்'' என்ற பட்டப் பெயர் வந்தது. அதன் சந்ததியினர் அப்பட்டத்தினை இன்றளவும் பயன்படுத்தி வருகின்றனர். சுமார் 70 ஆண்டுகள் அரசாட்சி புரிந்த அவருக்கு குலசேகரன், நரசிங்கமுனையரையன், மெய்பொருள் நாயனார் என 3 பிள்ளைகள் தோன்றினர். ஆக முல்லைக்கு தேர் தந்த பறம்பு மலை மன்னர் பாரியும், திருக்கோவிலூர் முள்ளூர் மலையின் தலைவன் மலையமான் திருமுடிக்காரியுமே பார்க்கவ குலத்தின் முன்னவர்கள் என புறநானூற்றுச் செய்திகள் தெரிவிக்கின்றன.

### மூப்பனார் - மலைய மன்னர் - நத்த மன்னர் வழியினர்

மலை நாட்டின் கீழ்பகுதியை ஆண்ட தெய்வீகனின் முதல் புதல்வன் குலசேரன் தன் மனைவி மதங்கமானியைத் துறந்து. குடந்தைக்கு அருகில் வசித்த மூப்பி சோழர் குலத்து மாலினி என்ற தவப்பெண்ணை மணந்து மூப்பன் என்ற மகனைப் பெற்றான். அவன் வழி வந்தவரே ''மூப்பனார்'' என்பர்.

அதேபோல் மலைநாட்டின் மேல்பகுதியை ஆண்ட தெய்வீகனின் 2வது மகன் நரசிங்க முனையரையன் கோமளாங்கியை மணந்தார். மகப்பேறு இல்லாததால், சுந்தரமூர்த்தி அடிகளை மகவாக ஏற்று வளர்த்து வந்தார்கள்.சுந்தரமூர்த்தி அடிகளுக்கு வாயதி ஆட்கொண்டான் எனும் புத்திரன் உதித்தான். அவன் வழிவந்த சந்ததியினரே ''மலைய மன்னர்'' எனப்படுவர்.

தெய்வீக அரசனது 3-ஆம் புத்திரன், மலைய நாட்டின் நடுப் பகுதியை ஆண்டவர். இவரே 63-நாயன்மார்களில் ஒருவராகிய மெய்பொருள் நாயனார். தன்னை எதிர்த்த சமண அரசன் முக்திநாதனை பலகாலப் போரில் வென்றார். இவர் மதனசிந்தாமணியை மணந்தார். இவர்களுக்கு காமாரி, புராரி, அந்தகாரி என்ற மூன்று மகன்கள். இவர் குலத்தாரே 'நத்த மன்னர்' என்று அழைக்கப்படுகிறார்கள். இதனை திருக்கோவிலூர் புராணமும், இறைவாசநல்லூர் (எலவாசனூர் கோட்டை) புராணமும் உரைக்கின்றன.

மலை சார்ந்து வாழ்ந்தவர் மலையமான் எனவும், நன்செய் - புன்செய் நிலங்களைத் தேடி வாழ்ந்தவர் (நத்தம்) நத்தமான் எனவும், கற்று வேதம் ஓதுவோர் சுருதிமான் எனவும், இவை மூன்றும் சேர்ந்ததே பார்க்கவ குலம் என்பதும் வரலாறு.

### பார்க்கவ குல அரசாட்சிக் காலம்

கி.பி. 7 ஆம் நூற்றாண்டு மற்றும் கி.பி. 8 ஆம் நூற்றாண்டுகளில் நரசிங்க முனையரையரின் ஆட்சிக் காலமாகும். அதாவது கி.பி. 680-லிருந்து, கி.பி. 740 வரை இருக்கலாம் என வரையறுக்க முடிகிறது. தொடர்ந்து 6- நூற்றாண்டுகள் பார்க்கவகுல அரசர்களின் ஆட்சி நடந்துள்ளதாக சரித்திரத்தில் காணமுடிகிறது.

### பார்க்கவ குலத்தில் தோன்றிய 4 வள்ளல்கள்

கடையேழு வள்ளல்களில் 4 வள்ளல்கள் பார்க்கவ குலத்தில் தோன்றியவர்கள் என்பதனை சங்க இலக்கியம், கலிங்கத்துபரணி, அகநானூறு, புறநானூறு, இதிகாசம், கல்வெட்டுகள், செப்பேடுகள், கலித்தொகை, நற்றிணை போன்றவற்றில் காணமுடிகிறது.

1. பாரிவள்ளல் : பிரான்மலை பறம்புமலை பகுதியை ஆண்டவர். இப் பகுதி சிவகங்கை - மதுரை பகுதியைச் சேர்ந்தது.

2. திருமுடிக்காரி: திருக்கோவிலூர் எனும் பெயர் பெற்ற தென்பெண்ணை நதியோரம் - ஆட்சி புரிந்தவர்.

3. அதிகன் : தருமபுரி - தகடூரில் தோன்றியவர் அதிகன் (எ) அதியமான் - மலையமான் வகுப்பில் பிறந்தவராவர்.

4. நல்லி : பெரம்பலூர் செட்டிகுளம் அருகிலுள்ள மாவிலங்கை - கொல்லி மலைப் பகுதிகளை ஆண்டவர். இது நத்தமன்னர் வாழும் பகுதியாகும்.

## ராஜராஜன் பார்க்கவகுல வழித்தோன்றலே!

அதேபோல், சோழர் குலம் பார்க்கவ குலத்திலிருந்து வந்ததுதான். ராஜராஜன் பார்க்கவகுல வழித்தோன்றலே. பார்க்கவ குலத்திலிருந்து பிரிவு ஏற்பட்டு பிறந்ததுதான் செம்பியர் குலம். செம்பியர் குலத்தில் பிறந்த தந்தை சுந்தரசோழனுக்கும், பார்க்கவ குலத்தில் பிறந்த தாய் வானவன் மாதேவிக்கும் பிறந்தவர்தான் ராஜராஜன். அவரது தாய் வானவன்மாதேவி திருக்கோவிலூர் மன்னன் மலையமான் திருமுடிக்காரியின் குலத்தில் பிறந்தவர் என திருவாலங்காட்டு செப்பேடு கூறுகிறது. ராஜராஜனின் தந்தைக்கு 18 மனைவிகள் இருந்தும், வாரிசு என்று வரும்போது வானவன் மாதேவிக்கு மட்டுமே அவ்வுரிமை கிடைக்கப் பெற்றது. அதன்பின் அவர்வழி ஈன்றெடுத்த நற்செல்வம்தான் முதலாம் ராஜராஜ சோழன். கடல் கடந்து ஆட்சி செய்து கங்கைகொண்டான், கடாரங்கொண்டான் என்ற சிறப்புப் பெயர் பெற்றவர்.


## பார்க்கவ குலம் பாரியின் பரம்பரையே!

பார்க்கவ குலம் பாரியின் பரம்பரையினர்தான் என கி.பி. 1234-இல் எழுதப்பட்ட தெய்வீகமன்னன் செப்பேடும், கி.பி.1210-இல் எழுதப்பட்ட திருக்கோவிலூர் மேலமடம் தெய்வீக நரசிங்கராஜ உடையார் செப்பேடும் கூறுகின்றன. அதேபோல், தமிழகத்தில் ஆட்சி புரிந்த முற்கால சோழர்களில் மனுநீதிச்சோழன், முகுந்தன், சிபிச்சக்கரவர்த்தி, காந்தன், செம்பியன், கரிகாலன், கிள்ளிவளவன், நலங்கிள்ளி, தித்தன், பெருங்கிள்ளி, நல்லுதிரன், கோப்பெருஞ்சோழன், கோச்செங்கண் ஆகியோர் சூரிய குலத்தில் தோன்றிய பார்க்கவ இன மன்னர்கள் என பல வரலாற்றுச் சான்றுகள் தெரிவிக்கின்றன.

## பார்க்கவகுல சங்கத்தின் தோற்றம்

அனைத்து துறைகளிலும் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் பார்க்கவர்களுக்கு கிடைத்திடவும், கல்வி, வேலை வாய்ப்புகளில் பார்க்கவர்களுக்கு உரிய இட ஒதுக்கீடு பெற்றிடவும் ஒரு அமைப்பு வேண்டும் என்பதன் காரணமாக அரும்பியதுதான் ''பார்க்கவகுல சங்கம்''.

1911ம் ஆண்டு ஆகஸ்ட் 6 ஆம் நாள் திருக் கோவிலூரரை அடுத்துள்ள மணம்பூண்டியில் திரு.ம.ரா.குமாரசாமியார் அவர்களை நிறுவனராகக் கொண்டு, திருச்சி மேல்கல்கண்டார்கோட்டை மே.வே. துரைசாமி உடையார், வெள்ளையூர் இ.சொக்கலிங்க உடையார், மாரண்டஹள்ளி எம்.ஆர்.வெங்கடாசல உடையார், குடந்தை வில்வராயநல்லூர் முத்துக்குமர உடையார், திருவாரூர் சிவவடிவேல் உடையார் ஆகியோரின் முயற்சியால், திருப்பாபுலியூர் ஸ்ரீஞானியார்சுவாமிகள் தலைமையில் பார்க்கவகுல சங்கம் தொடங்கப்பட்டது.



இதில், தந்தை பெரியார் (ஈ.வெ. ராமசாமி நாயக்கர்), தமிழ்தென்றல் திரு.வி. கல்யாணசுந்தர முதலியார், பொது உடமைத் தோழர் பா.ஜீவானந்தம் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு சிறப்பித்தனர் என்பது பெருமைக்குரிய செய்தியாகும்.

## பார்க்கவகுல சங்கம் வளர்ச்சியும் - காலமும் - வழிநடத்திய தலைவர்களும்

பார்க்கவகுல சங்கம் தோன்றிய பின் பல்வேறு காலகட்டங்களில், பல்வேறு தலைவர்களால் வழிநடத்தப்பட்டு இன்று நூறு ஆண்டுகளை எட்டியுள்ளது. கால வரிசைப்படி, அந்தந்த காலகட்டங்களில் வழிநடத்திய தலைவர்களால் பார்க்கவ குலம் எவ்வாறு வளர்ச்சியுற்றது என்பதனைக் கீழ்கண்டவாறு காண்போம்.

1. மணம்பூண்டி ம.ரா.குமாரசாமியார் (1911 -1929) காலத்தில்...
2. மேல்கல்கண்டார்கோட்டை மே.வே. துரைசாமி உடையார் (1929 - 1969) மற்றும் அவருடன் செயலாளராக இணைந்து பணியாற்றிய வெள்ளையூர் வெ.இ. சொக்கலிங்க உடையார் (1935 - 1962) காலத்தில்...
3. சேலம் ந. அருணாசல உடையார் (1969 - 1988) காலத்தில்...
4. தொழிலதிபர்.என்.பி.வி. ராமசாமி உடையார் (1988 - 1998) காலத்தில்...

5. கபிஸ்தலம் சு. சௌந்தரராஜ மூப்பனார் (1999 - 2009) காலத்தில்...

6. டாக்டர் பாரிவேந்தர் (1968 - 2012...) காலம் தொடர்கிறது...

**மணம்பூண்டி ம.ரா. குமாரசாமியார் (1911 - 1929) காலத்தில்...**




பார்க்கவகுல சங்கத்தின் நிறுவனத் தலைவர் ம.ரா.குமார சாமியார் அவர்களின் முயற்சியால் 06.08.1911 - இல் திருக்கோவிலூரை அடுத்த மணம்பூண்டியில் பார்க்கவ குலம் என்ற அமைப்பு தோன்றியது. அதன்பின் அவரது இடைவிடாத சுற்றுப் பயணம், பேச்சாற்றல் காரணமாக பரவலாக அனைத்து மாவட்டங்களிலும் அமைப்பு உருவாகி வேரூன்றியது. அதன் தொடர்ச்சியாக அவரது காலகட்டத்தில் ஏராளமான மாநாடுகள் நடந்தேறின. குறிப்பாக தந்தை பெரியார், ஈ.வெ.ரா. அவர்களின் வழிகாட்டுதலின்படி, சங்கத்தை வழி நடத்தி, தந்தை பெரியார் அவர்களைக் கொண்டே 6 - மிகப் பெரும் மாநாடுகள் நடத்திட்ட பெருமை ம.ரா. குமாரசாமி அவர்களையே சாரும். அவரது தலைமையில் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் ஏராளமான மாநாடுகள் நடைபெற்றதை, தந்தை பெரியாரின் ''குடிஅரசு'' இதழ்கள் மூலமாகவும், மற்றும் பல்வேறு ஆதார ஆவணச் செய்திகள் வாயிலாகவும் அறிய முடிகிறது. அவற்றைப் பட்டியலிடுவோம்.

தஞ்சை மாவட்டம் பழையனூரில் திரு. ராமச்சந்திர உடையார் அவர்களது தலைமையிலும், 1916 - தென்னார்காடு மாவட்டம் எலவானாசூர்கோட்டை, 1918 - தஞ்சை மாவட்டம் குடந்தையில் வில்வராயநல்லூர் முத்துக்குமார உடையார் தலைமையில் ஒரு மாநாடு. இதில் தந்தை பெரியார் ஈ.வெ.ரா, திரு.வி.க. பா.ஜீவா போன்றோர் கலந்துகொண்டனர். மேலும், தமிழறிஞர் சதாசிவ பண்டாரத்தார் எழுதிய திருக்கோவிலூர்புராண நூல் வெளியிடப்பட்டது. 1925 ஏப்ரல் 13-ல் திருச்சி மேல்கல்கண்டார்கோட்டை மே.வே. துரைசாமி அவர்கள் ஆசிரியராக இருந்து ''உடையார் உபகாரி'' எனும் பத்திரிகை தொடங்கப்பட்டது. அதன்பின் 1927 - 1928 ஆம் ஆண்டுகளில் அதே பத்திரிகை 'தெய்வீகன்' என்ற பெயரில் வெளிவந்து கொண்டிருந்தது. 1924ல் குடந்தையில் அச்சுதமங்கலம் சி.ஆர். உடையார் தலைமையில் மாநாடு, 1925 - நாமக்கல் சேந்தமங்கலத்தில் ஜமீன் ஐராவத உடையார் தலைமையில் 10-வது மாநாடு, தருமபுரி மாரண்டஹள்ளியில் பார்க்கவபந்து எம்.ஆர்.வெங்கடாசல உடையார் தலைமையில் 11-வது மாநாடு. இதில் தந்தை பெரியார் ஈ.வெ.ரா, திரு.வி.க, மே.வே.துரைசாமி உடையார், வெள்ளையூர் இ. சொக்கலிங்க உடையார் உள்ளிட்டோர் பங்கேற்று சிறப்பித்தனர். உடுமலைப்பேட்டை அம்மாபட்டி புதூரில் ஒரு மாநாடு, மேலும் தாராபுரத்தில் ஒரு மாநாடு. இதில் திரு.வி.க. தந்தை பெரியார் ஈ.வெ.ரா. பங்கேற்று சிறப்பித்துள்ளனர்.1926ல் குடந்தையில் 12வது மாகாண மாநாடு அதங்குடி ஸ்ரீமான் சாமிநாத உடையார் தலைமையில் நடைபெற்றது. திருச்சி ஜில்லா மாநாடு மேல்கல்கண்டார்கோட்டையில் மே.வே. துரைசாமி உடையார் தலைமையில், எம்.ஆர். வெங்கடாசல உடையார், சாமி. சிதம்பரனார் பங்கேற்றனர்.

1926ல் பெரம்பலூரில் முதல் தாலுக்கா மாநாடு நடைபெற்றது. இதில் எம்.ஆர். வெங்கடாசல உடையார், சாமி. சிதம்பரனார், வில்வராயநல்லூர் முத்துக்குமர உடையார், மே.வே.துரைசாமி உடையார், ஆலம்பாடி மருத உடையார், வேப்பந்தட்டை ஆறுமுக உடையார் உள்ளிட்டோர் பங்கேற்றுள்ளனர். 1928ல் மதுரை-தருமத்தம்பட்டியில் (ஆத்தூர்) முதலாவது ஜில்லா மாநாடு ஆத்தூர் S.பழனி சாமி உடையார்பி.ஏ.,பி.எல் ஏற்பாட்டில் நடந்தேறியது. இதில் தந்தை பெரியார் ஈ.வெ.ரா, சௌந்தரபாண்டியன், சாமி.சிதம்பரனார், S.V.லிங்கம், முத்துக்குமர உடையார், மே.வே.துரைசாமி உடையார், எம்.ஆர்.வெங்கடாசல உடையார், உசன்மீரா ராவுத்தர் உள்ளிட்டோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டனர். 1929ல் சங்கத்தின் நிறுவனத் தலைவர் மணம்பூண்டிம.ரா. குமாரசாமியார் மறைவுற்றார்.

**மேல்கல்கண்டார்கோட்டை மே.வெ.துரைசாமி உடையார் (1929 - 1969) மற்றும் அவருடன் செயலாளராக இணைந்து பணியாற்றிய வெள்ளையூர் வெ.இ. சொக்கலிங்க உடையார் (1935 - 1962) காலத்தில்...**



நிறுவனர் மணம்பூண்டி ம.ரா.குமார சாமியார் 1929ல் மறைவுற்றதைத்தொடர்ந்து, மேல்கல்கண்டார் கோட்டை மே.வே.துரைசாமி உடையார் சங்கத்தின் தலைவராகவும், வெள்ளையூர் வெ.இ.சொக்கலிங்க உடையார் செயலாளராகவும் இணைந்து சங்கப் பணியாற்றினர். அவர்கள் காலத்தில் நடைபெற்ற

சங்க வளர்ச்சியைப் பட்டியலிடும்போது, 1935ல் தென்னார்காடு மாவட்டம் செம்பியன்மாதேவியில் 13 வது மாவட்ட மாநாடு வெள்ளையூர் சொக்கலிங்க உடையார் பொறுப்பேற்று நடத்தினார். அவர் ஆசிரியராக இருந்து 1940 - ஆம் ஆண்டு 'பார்க்கவன்' எனும் சங்கப் பத்திரிகையினை தொடங்கி நடத்தி வந்தார். அது பிற்காலத்தில் 1961ல் ''கிராம முன்னேற்றம்'' என்ற பெயரில் பார்க்கவகுல பட்டதாரிகள் மற்றும் அரசு ஊழியர்களை அடையாளங்காட்டி, கல்வி வளர்ச் சி க்காக சமுதாயப் பத்திரிகையாக நடத்தி வந்தார். 1937ல் ராசிபுரத்தில் யு. சுப்ரமணிய உடையார் தலைமையில் மாநாடு, 1941ல் திருச்சி உத்தமர்கோயிலில் ஒரு மாநாடு, 1943ல் தஞ்சை மயிலாடுதுறையில் மாநாடு, 1944ல் மயிலாடுதுறையில் பார்க்கவ குல கல்விச் சங்கம் தொடங்கப்பட்டு பரசலூர் முருகேச உடையார் தலைமையில் முதல் மாநாடு, 1945ல் மீண்டும் கல்விச் சங்கத்தின் 2வது மாநாட்டினை பரசலூர் முருகேச உடையார் மயிலாடுதுறையில் நடத்தினார். திருவாரூரில் தென்னிந்திய பார்க்கவகுல 5 வது கல்வி மாநாடு டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜ் ராஜாபாதர் உடையார் தலைமையில், மழையுர் ம.ரா. கோபால்சாமி உடையார் அவர்களால் நடத்தப்பட்டது.



1945ல் ராசிபுரம் பட்டணம் வட்டார மாநாடு இதில் பார்க்கவ மகளிர்சாத்தனூர் குப்பம்மாள் கலந்து கொண்டார். சேலம் அம்மாபேட்டையிலும், ஆத்தூரிலும், நாமக்கல் - புதன் சந்தையில் என பல வட்டார மாநாடுகள் அதே ஆண்டில் நடைபெற்றன. 1950ல் திருக்கோவிலூரில் மாநில மாநாடும், 1957ல் திருக்கோவிலூரில் மற்றொரு மாநில மாநாடும் வெள்ளையூர் சொக்கலிங்க உடையார் நடத்தினார். இதில் நீதிபதி ராஜாபாதர் தலைமையேற்று, மதுரை வழக்கறிஞர் ராசையா, திருவாரூர் சிவவடிவேல் உடையார் உள்ளிட்டோர் பங்கேற்று சிறப்பித்தனர். இதற்கு முன் 1955ல் சேலத்தில் ஒரு மாநாடு, 1958ல் திருச்சியில் திண்டுக்கல் பழனிசாமி உடையார் தலைமையில் பார்க்கவகுல பட்டதாரிகள் மாநாடு ஒன்று நடைபெற்றது என சங்க வளர்ச்சியின் 2ஆம் கட்டம் நீள்கிறது. 1962ல் வெள்ளையூர் சொக்கலிங்க உடையார் மறைவுற்றார். வயது முதிர்வின் காரணமாக துரைசாமி உடையார் அவர்களால் தொடர்ந்து சங்கத்தை நடத்த முடியாமல் சில காலம் சங்கம் எந்தவித செயல்பாடுமின்றி தொய்வு ஏற்பட்டது.



## சேலம் ந. அருணாசல உடையார் (1969 - 1988) காலத்தில்...

சேலம் ந.அருணாசல உடையார் அவர்கள் சங்கத்தின் மாநில தலைவராக 19.10.1969 இல் பொறுப்பேற்றார். புலவர் பி. அண்ணாமலை அவர்களை ஆசிரியராகக் கொண்டு ''வள்ளல் பாரி'' எனும் சமுதாயப் பத்திரிகை 1969 இல் தொடங்கப்பட்டது. 1971ல் திருச்சியில் ஓர் மாநாடு, பரமக்குடியில் தந்தை பெரியார் ஈ.வெ.ரா அவர்களைக் கொண்டு மற்றொரு மாநாடு. இதில் தமிழக அரசின் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் க. ராசாராம் பங்கேற்றார். இதற்கான ஏற்பாடுகளை புலவர் பி.அண்ணாமலை அவர்கள் செய்திருந்தார். அதன் பின் 1972ல் சிவகங்கை காளையார்கோயில் - கல்லல் பகுதியில் மாவட்ட மாநாடு நடத்தப்பட்டது. 1976ல் சென்னை -தேவநேயப் பாவாணர் நூலகக்கட்டடத்தில்நடைபெற்ற சங்க பொதுக்குழு கூட்டத்தில் டி.பி. கதிரவன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு 'பார்க்கவன் தூது' சங்க பத்திரிகை வெளிவரத் தொடங்கியது. 1977ல் சேலம் ஆர். தேவதாஸ் இளைஞரணி அமைப்பாளர் அவர்களின் மேற்பார்வையில் சேலத்தில் 1 - ஆண்டு காலம் இதழை நடத்தினார். பின் 1983 ஆம் ஆண்டு வரை என்.சி. பாலசுப்ரமணியம் அவர்களை ஆசிரியராகக் கொண்டு, டி.ஆர். சுப்ரமணியம் அவர்களின் ஆத்தூர் 'பார்க்கவன் நிதி நிறுவன அறக்கட்டளை' மூலமாக பார்க்கவன் தூது வெளிவந்து கொண்டிருந்தது.1984ல் சேலத்தில் எழுச்சிமிகு மாநில மாநாட்டினை ந.அருணாசல உடையார் அவர்கள் தலைமையில் நடத்தி, இதுவரை மக்கள் கண்டிராத 5-லட்சம் பார்க்கவர்கள் திரண்டு பிரமிக்க வைத்தனர். 'பார்க்கவன் தூது' அது முதல் சங்கத்தின் சார்பில் அம்மாபேட்டை புலவர் சின்னாண்டார் பொறுப்பில், தொடர்ந்து என்.சி.பாலசுப்ரமணியம் அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளியானது. 1986ல் புதுக்கோட்டையில் ஒரு மாவட்ட மாநாடு நடத்தி, பின் 1988ல் ந.அருணாசல உடையார் அவர்கள் மறைவுற்றார்.



## தொழிலதிபர் N.P.V. ராமசாமி உடையார் (1988 - 1998) காலத்தில்...

பிரபல தொழிலதிபரும், ஸ்ரீராமசந்திரா மருத்துவ பல்கலைக் கழகத்தின் வேந்தருமான திரு.N.P.V. ராமசாமி உடையார்

தலைவராக இருந்த காலத்தில் சென்னையில் சங்கம் பீடு நடை போட்டது. அப்போது மூத்த வழக்கறிஞர் திரு.ஜி.ராஜன் அவர்கள் சிலகாலம் பொதுச்செயலாளராகவும், பிறகு மாநில துணை தலைவராகவும் இருந்ததோடு, 'பார்க்கவன் தூது'வை ஜி. ராஜன் அவர்களும், எஸ்.ஐ. முத்து அவர்களும் இணைந்துதான் நடத்திக் கொண்டு வந்தனர். 1996ல் திருச்சியில் உடையார் தலைமையில் 2 லட்சம் பார்க்கவர்கள் அணிதிரண்டு மாவட்ட எழுச்சிப் பேரணி என டாக்டர் முத்துகுமார் அவர்களின் ஏற்பாட்டில் நடத்தினர். இதில் ஜி.கே. மூப்பனார், ஜி.ஆர். மூப்பனார் போன்ற முக்கிய தலைவர்கள் கலந்து கொண்டனர். சிந்தாமணி - அண்ணாசிலையில் தொடங்கிய பேரணி, வெஸ்ட்லி மேனிலைப்பள்ளி மைதானம் சென்றடைய 7 மணி நேரம் கடந்தது என்றால் எவ்வளவு பெரிய எழுச்சிப் பேரணியாக அமைந்திருக்கும் என எண்ணத் தோன்றுகிறது. இவரது காலத்தில்தான், அரசியல் தலைவர்கள் பார்க்கவகுல சமுதாயத்தினரை மதித்தனர். 'உடையார்' என்ற பட்டப் பெயருக்கு பெருமை தேடித்தந்தார். இவரது சுதேச மித்திரன் அச்சகத்திலிருந்து 'பார்க்கவன் தூது' சங்கப் பத்திரிகை வெளிவந்தது. சங்கத்தின் வளர்ச்சிக்கு ஏராளமான வகையில் உதவினார். இவர் 1998 இல் மறைவுற்றார்.



## கபிஸ்தலம் R. சௌந்தரராஜ மூப்பனார் (1999 - 2009) காலத்தில்...

முதிர்ந்த அரசியல் ஞானமும், அரவணைத்துச் செல்லும் விவேகமும் கொண்ட கபிஸ்தலம் R.சௌந்தர ராஜ மூப்பனார் தலைவராகப் பொறுப்பேற்றுக்கொண்டு, மாவட்டந்தோறும் சுற்றுப்பயணம் செய்து சங்க அமைப்புகளை ஒழுங்குபடுத்தினார். 'பார்க்கவன் தூது' ஆசிரியராக பொறுப்பேற்று தொடர்ந்து மாவட்ட மலராக வெளியிட்டு வந்தார். 08.06.2008ல் சேலத்தில் மாபெரும் மண்டல மாநாடு நடத்தி உலகிற்கு பார்க்கவ இனத்தை அடையாளங் காட்டிட வழிவகுத்தார். உடல் நலக்குறைவால், பணி தொடரமுடியாமல் 2009ல் திரு. கோவைத்தம்பி அவர்கள் சங்க மாநிலத் தலைவராகவும் டாக்டர் பாரிவேந்தர் அவர்கள் உயர்மட்டக்குழு தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.



## டாக்டர் பாரிவேந்தர் (1968 - 2012) காலம் தொடர்கிறது...

1969-70 ஆம் ஆண்டு முதலே சென்னையில் டாக்டர் பாரிவேந்தர் அவர்களாள் 'உடையார் சங்கம்' தொடங்கப்பட்டு செயல்பட்டு வருவதை அனைவரும் அறிவோம். பின்பு 1976 ஜுன் மாதத்தில் சென்னை மேற்கு மாம்பலம் ஸ்டேஷன் ரோட்டில் இருந்த தமிழ்நாடு டுடோரியல் கல்லூரியில், அதன் உரிமையாளரும் அன்றைய கல்லூரி முதல்வருமான டாக்டர் பாரிவேந்தர் அவர்கள் செய்த பணிகளினால் உடையார் சங்கம் மிகச் சிறப்பாக நடந்து வந்தது.

டாக்டர் பாரிவேந்தர் அவர்களும் திரு.என். வேலாயுதம் அவர்களும் அன்று சென்னையில் இருந்த பலரையும் சந்தித்துப் பேசி உணர்வுகளை ஊட்டி சங்கத்தில் இணைந்தனர். மாதம் இருமுறை டாக்டர் பாரிவேந்தர் தமிழ்நாடு டுடோரியல் கல்லூரியில் கூட்டங்களை கூட்டி, சிற்றுண்டி கொடுத்து, உணர்வுப் பூர்வமாக அளவளாவி ஆக்கமும், ஊக்கமும் கொடுத்து, சென்னை மாவட்டச் சங்கத்தை நடத்தி வந்தார். இந்த காலக் கட்டத்தில் நண்பர் திரு.டி.பி.கதிரவன் அட்வகேட் அவர்களை டாக்டர் பாரிவேந்தர் சங்கப் பணியில் அமர்த்தினார். சென்னை மாவட்ட சங்கம் செயல்படுவதற்கு, வாடகையில்லாமல் இலவசமாக ஒரு அலுவலக அறையையும் கொடுத்து உதவினார். அவர்களுடைய வழிகாட்டுதலின்படி திரு. டி.பி. கதிரவன் அவர்கள் சென்னையில் சிதறிக் கிடந்த நம்மவர்கள் சுமார் 700-பேரைக் கண்டுபிடித்து சென்னை மாவட்ட சங்கத்தில் உறுப்பினராக சேர்த்தார். இவ்வாறு சென்னை மாவட்ட சங்கம் பல ஆண்டுகள்

சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருந்தது.

இந்த சமயத்தில் சேலத்திலிருந்து புலவர் அண்ணாமலை அவர்கள் 'வள்ளல் பாரி' என்ற பத்திரிகையை பார்க்கவகுல சங்கத்துக்காக வெளியிட்டு வந்தார்கள். சென்னை சங்கத்தைப் பற்றி புலவர் மூலம் கேள்வியுற்ற மாநிலத் தலைவர் திரு. ந. அருணாசல உடையார் அவர்கள் ஒரு நாள் சென்னை மாவட்ட சங்க அலுவலகம் வந்தார்கள். அங்கிருந்து அவரை டாக்டர் பாரிவேந்தர் தமது வீட்டிற்கு அழைத்துச் சென்றார். அந்த வீடுதான் இப்போது சென்னை அசோக் நகரிலுள்ள பார்க்கவ குல முன்னேற்ற சங்கத் தலைமை அலுவலகமாகும். அப்போது திரு. ந.அருணாசல உடையார் அவர்கள் தன்னால் சங்கத்தை தொடர்ந்து நடத்த முடியவில்லை என்றும், அதை மூடிவிட முடிவெடுத்துள்ளதாகவும் சொன்னார். இந்த தகவல் தெரியவந்த சில மாதங்கள் கழித்து டாக்டர் பாரிவேந்தர் அவர்கள் சென்னை அண்ணா சாலையில் உள்ள L.L.A. பில்டிங்கில் சென்னை மாவட்ட கூட்டத்தை கூட்டினார். அதில் மாநில தலைவர் திரு.ந.அருணாசல உடையார் அவர்களும், புலவர் அண்ணாமலை அவர்களும் சிறப்பு அழைப்பாளர்களாகப் பங்குபெற்றனர். அன்று படித்தவர்கள் நிறைந்த தமிழகத் தலைநகர் சென்னையிலிருந்து 'வள்ளல் பாரி' பத்திரிக்கையை வெளியிடலாம் என டாக்டர் பாரிவேந்தர் சொன்னார். அதற்கு புலவர் அண்ணாமலை அவர்கள், தனக்கு பத்திரிகை நடத்தியதில் ஏற்பட்ட ரூ.25000 நட்டத்தை ஈடு செய்தால்தான் சென்னையிலிருந்து 'வள்ளல் பாரி'யை நடத்த அனுமதிக்க முடியும் என்று சொன்னார்கள். அந்த தொகையை கொடுப்பதற்குப் பதிலாக சென்னை மாவட்டத்திலேயே நிதியைத் திரட்டி புதிய ஒரு பத்திரிக்கையை நடத்துவோம் என டாக்டர் பாரிவேந்தர் அவர்கள் முடிவுசெய்தார்கள்.

அந்த நேரத்தில்தான் புதிய பத்திரிக்கைக்கு டாக்டர் பாரிவேந்தர் அவர்களாள் 'பார்க்கவன் தூது' என்று பெயரிடப்பட்டு, அந்தப் பெயர் எக்மோரில் பதிவு செய்யப்பட்டது. மேற்கு மாம்பலத்தில் ஸ்டேஷன் ரோட்டில் உள்ள ஆனந்தா பில்டிங், 3வது மாடி அறை எண் 6, பத்திரிக்கை அலுவலகமாகப் பதிவு செய்யப்பட்டது. உடனடியாக புதிய பத்திரிகைக்கு நிதி திரட்டும் பொருட்டு, சென்னை கலைவாணர் அரங்கில் A.V. ரமணன் அவர்களை வைத்து பாட்டுக் கச்சேரி ஒன்றினை நடத்தினார்கள். அந்த நிகழ்ச்சியில் பெற்ற தொகையைக் கொண்டு 'பார்க்கவன் தூது' பத்திரிக்கை முறையாக திரு.டி.பி.கதிரவன் அட்வகேட் மூலம் பதிவு செய்யப்பட்டு சென்னையிலிருந்து வெளியிடப்பட்டது. டாக்டர் பாரிவேந்தர் அவர்கள் கொடுத்த அலுவலகத்திலிருந்து சென்னை மாவட்டச் சங்கமும், 'பார்க்கவன் தூது' பத்திரிக்கையும் இயங்கின. திரு. டி.பி.கதிரவன் அட்வகேட் அவர்களே பார்க்கவன் தூதுவின் முதல் ஆசிரியர். இவ்வாறாக 'பார்க்கவன் தூது' சென்னையிலிருந்து சுமார் ஐந்து ஆண்டு காலம் வெளியிடப்பட்டது.

அதன் பிறகு, அப்போது சென்னை சட்டக் கல்லூரியில் படித்துக் கொண்டு இருந்த சேலம் என்.ராமசாமி உடையார் அவர்களின் புதல்வன் திரு. R. தேவதாஸ் அவர்களும் தொடர்ந்து சங்க கூட்டத்தில் கலந்து கொள்வது வழக்கம். மேலும் தொடர்ந்து பத்திரிக்கை நடத்த சென்னை சங்கம் சிரமப்பட்டதால், திரு.R.தேவதாஸ் அவர்கள், சேலத்தில் இருந்து வெளியிடுகிறேன் என்று சொல்லி, 'பார்க்கவன் தூது' சேலத்திற்கு மாற்றப்பட்டது. அங்கிருந்து சிலகாலம் வெளிவந்தது. அங்கும் அதற்கு ஆதரவு இல்லாததால், அன்றைய பொருளாளர் திரு. T.R. சுப்பிரமணியம் வேந்தரின் உடன் பிறந்த அண்ணன்) 'பார்க்கவன் தூது' வெளியிடும் பொறுப்பை ஏற்றார். திரு. N.C பாலசுப்பிரமணியன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு 10 ஆண்டுகள் 'பார்க்கவன் தூது' சேலம் ஆத்தூரில் இருந்து வெளிவந்தது. T.R.S. மறைவிற்கு பிறகு மீண்டும் சென்னை வந்தது என்பதுதான் பார்க்கவன் தூதுவின் வரலாறு.

டாக்டர் பாரிவேந்தர் மேல் நம்பிக்கை கொண்டோர், சங்கத்தில் 1968ல் இருந்து சங்கப் பணி அறிந்தோர், சமுதாய மக்கள் ஆர்வம் காட்டாததால், சங்கத்தில் தொய்வு ஏற்பட்டு, மறைந்த தலைவர் ந.அருணாசல உடையார் அவர்கள் சங்கத்தை மூடிவிட நினைக்கிறேன் என்று வேந்தரின் வீடுதேடி சென்று கூறிய நிலையில், வேண்டாம், சங்கத்தை உயிர்பித்துக் காட்டுவோம், என உறுதி கொடுத்து, சென்னையில் L.L.A. கட்டிடத்தில் 750 பேரைக் கூட்டி, அவருக்கு நம்பிக்கை கொடுத்த, அந்த வரலாறு தெரிந்தவர்கள், எல்லாம் வேந்தர் பின்னால் வந்தார்கள். இன்றைக்கு சமுதாயப் பொறுப்பில் உள்ள பலபேருக்கு இந்த நிகழ்வுகள் எல்லாம் தெரிய வாய்ப்பில்லை. பார்க்கவகுல சங்கத்தின் மாநில பொதுச் செயலாளராக திரு.ந.அருணாசல உடையாரோடு பணியாற்றியவர்தான். டாக்டர் பாரிவேந்தர். பின்னால் வேலைப்பளு காரணமாக இடையில் சில ஆண்டுகள், எந்தப் பொறுப்பும் ஏற்றுக்கொள்ளாமல், தனிப்பட்ட முறையில் சொந்த தொழில் மூலம், இந்த சமுதாய மக்களுக்கு தொடர்ந்து கல்வி, வேலைவாய்ப்பு, என பல வழிகாட்டுதல்களை தொடர்ந்து செய்து வந்தார்கள்.

இந்த நிகழ்வுகள் எல்லாம் அன்று நடக்கவில்லை என்றால், இன்று பேசப்படுகிற 100 ஆண்டு கால சங்கம், தன்னுடைய 65 வயதிலேயே தனது ஆயுளை முடித்துக் கொண்டிருக்கும். ''என் வாழ்நாளில் இந்த சமுதாயப் பணியில் ஒரு வழிகாட்டியாக நானும் இருந்திருக்கிறேன். சமுதாயத்திற்கு எதிர்பார்ப்பெல்லாம், இந்த சமுதாய மக்களை மாற்று சமுதாயம் மதிக்க வேண்டும், ஒற்றுமையை உருவாக்க வேண்டும், முடிந்தவரை அரசியல் பகிர்வைப் பெற்று, பார்க்கவகுல மக்களுக்கு உலகளவில் அங்கீகாரம் பெற்றுத் தரவேண்டும்'' என்பதுதான் டாக்டர் பாரிவேந்தர் அவர்களின் நிலையாகும்.

''இந்த சமுதாயச் சங்கம் எப்பொழுது எல்லாம் சுகவீனம் அடைகிறதோ, அப்பொழுது எல்லாம் காலதேவன், டாக்டர் பாரிவேந்தர் அவர்களை கடமையாற்றப் பணித்து விடுகிறான். அப்படித்தான் 2008 - ஆம் ஆண்டு கல்விப் பணியில் ஓய்வாக இருந்த டாக்டர் பாரிவேந்தர் அவர்களை அப்பொழுது சங்கப் பொறுப்பில் இருந்தவர்கள் தேடி சென்று சங்கத்தை வலுப்படுத்தவேண்டும் என்றும், அதில் உங்கள் தலைமை தேவையென்றும் வேண்டினார்கள். ஆனால், அவர்களிடம் பதவி ஏதும் ஏற்கமாட்டேன், ஆனால், வலுப்படுத்த வழியைச் சொல்கிறேன்'' என்று கூறிய டாக்டர் பாரிவேந்தர், 3000 சமுதாய இளைஞர்களை அழைத்துவரச் செய்து எஸ்.ஆர்.எம். பல்கலைகழகத்தில் 1 நாள் தொழில் முனைவோர் வேலைவாய்ப்பு பயிற்சி முகாம் ஏற்படுத்தி, அதில் அந்தந்தத் துறையில் சிறந்த வல்லுனர்களை அழைத்து, விவசாயம், கல்வி, வேலைவாய்ப்பு, அரசியல், கலை போன்றவற்றை ஒருநாள் (24-12-2008)பயிற்சி முகாம் நடத்திச் சான்றிதழ் வழங்கி ஊக்குவித்தார். அதன் பலன்தான் சில மாதங்களில் சமுதாய இளைஞர்களிடம் தமிழ்நாடு முழுவதுமாக, காட்டுத் தீயாகப் பரவி, அந்த இளைஞர்கள் சங்கத்தில் தங்களை ஆர்வத்தோடு ஈடுபடுத்திக் கொண்டனர். 2009க்கு பின்னர் 10.03.2009ல் பெரம்பலூரில் 25000 சமுதாய இளைஞர்களை ஒரு வார காலக்கெடுவில் கூட்ட முடிந்தது. அந்த சக்தி, அதன் பின்னர் சங்கம் வளர உதவிற்று. பின்னர், இளைஞர்களின் ஆர்வத்தால் புத்துணர்ச்சி பெற்று, தளர்ந்திருந்த சங்கம், தலை நிமிர்ந்து நின்றிட பல பொதுக் கூட்டங்களும், மாநாடுகளும் போட்டு, சாதனை செய்த வரலாறு எல்லாம் நீங்கள் அறிவீர்கள்.

இதன் தொடர்ச்சியாக, சங்கத்தின் பொதுக்குழு கூட்டம் 15-02-2009 சென்னையில் நடைபெற்றது. இதில் ஜனநாயக முறைப்படி உயர்மட்டக்குழு என்ற முழு அதிகாரம் பெற்ற 11 - உறுப்பினர்கள் கொண்ட ஒரு அமைப்பை உருவாக்கி, 23 மாவட்ட தலைவர்களின் ரகசிய வாக்கெடுப்பின் மூலம் உயர்மட்ட குழு தலைவர் தேர்தல் நடத்தப்பட்டது. இதில் 19-வாக்குகள் ஆதரவுடன் உயர்மட்ட குழு தலைவராக டாக்டர் பாரிவேந்தர் அவர்களை தேர்ந்தெடுத்தார்கள்.

1968 முதலே சங்கத்தோடு தொடர்புடைய டாக்டர் பாரிவேந்தர் 1978 ஆம் ஆண்டு மாநில பொதுச் செயலாளராகவும் திறம்பட பணியாற்றிய அனுபவத்துடன், 1984 ல் சேலம் மாநகரில் நடைபெற்ற பிரமாண்டமான மாநில சங்க மாநாட்டில் கல்வி பற்றி அனைவரும் பாராட்டும் வகையில் சொற்பொழிவாற்றிய பெருமைக்கும் உரியவர். உயர்மட்ட குழு தலைவர் என்ற முறையில், தனது தலைமையில் 22.02.2009 ல் சென்னையில் நடந்த முதல் உயர்மட்டக்குழு கூட்டத்தில் சங்க மாநில தலைவராக திரு. கோவைத்தம்பி அவர்கள் 11 பேர் கொண்ட உயர்மட்டக்குழுவால்ஒருமித்த கருத்தோடு தேர்ந்தெடுக்கப்பட்டார். அதனைத் தொடர்ந்து 3.3.2009ல் திருச்சியில் நடைபெற்ற சங்க மாநில கலந்துரையாடல் மற்றும் உயர்மட்ட குழு கூட்டம் மாநிலத் தலைவர் புதிய பொறுப்பாளர்களின் அறிமுக கூட்டமாகவும் அமைந்தது.

மாநில நிர்வாகிகள் பொறுப்பேற்றவுடன் 10-03-2009 அன்று பெரம்பலூரில் மாபெரும் எழுச்சி மிகு இளைஞரணி கூட்டம் கூட்டப்பட்டு அதில் 25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இளைஞர்கள் கூடி ஒரு மாபெரும் இளைஞரணி மாநாடாகவே அதை மாற்றிவிட்டனர். அந்தக் கூட்டத்தின் வெற்றியைத் தொடர்ந்து 15-03-2009 அன்று சென்னையில் சிறப்புக் கூட்டம் நடைபெற்றது. இக் கூட்டத்தில் கலந்துகொண்ட நம் சமுதாய மக்கள் கருத்தின்படி 29.03.2009 அன்று கள்ளக்குறிச்சியில் மாபெரும் பொதுக்கூட்டம் நடத்துவது என்று முடிவெடுக்கப்பட்டது. அந்த பொதுக் கூட்டத்தில் ஆயிரக்கணக்கில் பார்க்கவகுல மக்கள் கூடுவார்கள் என்று எதிர்பார்த்த வேளையில்,3 - லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் கூடி தமிழக அரசியலில் ஒரு பூகம்பத்தையே உருவாக்கி, புதிய பார்க்கவ வரலாற்றை ஏற்படுத்தி முத்திரை பதித்தனர்.

இதன் விளைவாக அன்றைய பொதுக்கூட்டத்திலேயே ஒரு அரசியல் கட்சி விரைவில் தொடங்கப்படும் என்று கூடியிருந்த லட்சக்கணக்கான மக்கள் முன்னிலையில் அவர்களது எழுச்சியையும், வேண்டுகோளையும் ஏற்று டாக்டர் பாரிவேந்தர் அறிவித்தார்கள். இதையடுத்து 30.03.2009 அன்று கள்ளக்குறிச்சியில் நடைபெற்ற

பொதுக்கூட்ட தீர்மான நகலை தமிழக அரசின் கவனத்திற்கு மாநில பொறுப்பாளர்கள் கொண்டு சேர்த்தனர். அதன் தாக்கமாக நமது சமுதாய மக்கள் அனைவரின் ஒற்றுமையால், நம்முடைய ஆதரவோடு சிதம்பரம், கடலூர், பெரம்பலூர், கள்ளக்குறிச்சி, நாமக்கல் மற்றும் சிவகங்கை ஆகிய 6 நாடாளுமன்ற தொகுதியில் வெற்றிபெற்று தமிழகத்திற்கு பெருமை சேர்த்தனர்.

14.04.2009 சென்னை - அசோக் நகரில் பார்க்கவ குல சங்கத்திற்கு மேலும் வலுவூட்டும் விதமாகவும், இளைஞர்களுக்கு நம்பிக்கை ஊட்டும் விதமாகவும், பாரி நற்பணி மன்றம் என்ற அமைப்பு நிறுவப்பட்டது. அதற்கு நிறுவனர் தலைவராக டாக்டர் பாரிவேந்தர் அவர்களும், மாநில பொதுச்செயலாளராக திரு. பி. ஜெயசீலன் அவர்களும் இருந்தனர். அதன் விளைவாக தமிழகம் முழுவதும் சுமார் 8,000 கிளைகளையும், 2,00,000க்கும் மேற்பட்ட உறுப்பினர்களையும் கொண்டு அதிவேகத்தில் மன்றம் வளர்ந்தது.

நமது பார்க்கவ மக்கள் அனைவரையும் நேரடியாக சந்திக்க வேண்டும் என்ற அடிப்படையில் சங்க மாநில பொறுப்பாளர்களும், வேந்தர் தலைமையிலான உயர்மட்டக் குழுவினருடன் 20.06.2009 அன்று கடலூர் - வேப்பூர், 21.06.09 அன்று நாமக்கல், கரூர்-தோகைமலை, 22.06.09 அன்று விழுப்புரம் - உளுந்தூர்பேட்டை, 27.06.09 அன்று பெரம்பலூர், அரியலூர், 28.06.09 அன்று நாகை - மயிலாடுதுறை, திருவாரூர் - குடவாசல், தஞ்சாவூர், 05.07.2009 அன்று மதுரை, 12.07.09 அன்று திருச்சி மற்றும் பல்வேறு மாவட்டங்கள் உள்ளடக்கிய 22 மாவட்டங்களுக்கு சுற்றுப்பயணம் செய்து கலந்தாய்வு, பாரி நற்பணி மன்றங்கள் அமைத்தல், பார்க்கவ குல சங்க அமைப்புகளை வலுப்படுத்துதல், பார்க்கவன் தூது சந்தாதாரர்களை அதிகரித்தல், நலத் திட்டங்கள் தொடங்கி வைத்தல் போன்ற நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

குறிப்பாக வேப்பூரில் நடைபெற்ற கலந்தாய்வுக் கூட்டத்தில், புதுப்பொலிவுடன், மாறுபட்ட பல்வேறு செய்திகள் அடங்கிய 'பார்க்கவன் தூது' இதழை வெளியிட்டோம். அதைத் தொடர்ந்து 5 ஆயிரம் பிரதிகள் அச்சடிக்கப்பட்டு வந்த 'பார்க்கவன் தூது' இதழ், 50 ஆயிரம் என்ற எண்ணிக்கையில் அச்சிடப்பட்டு அனைத்து பார்க்கவகுல மக்களின் ஆதரவையும், ஊக்கத்தையும் பெற்றது. அதன் வாயிலாக 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆயுள் சந்தாவும், 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆண்டு சந்தாவும் அதிகரித்ததுடன், அதன் நிதி பார்க்கவகுல சங்க வளர்ச்சிக்கு உதவிட்டது. பார்க்கவன் தூதுவின் சந்தாதாரர்களை அதிகப்படுத்தவும், நம் இன மக்கள் கணக்கெடுப்பிற்காகவும், நம் இனத்தைச் சேர்ந்த படித்த, வேலைவாய்ப்பற்ற 100 இளைஞர்களுக்கு ரூ.5 ஆயிரம் தொகுப்பு ஊதியமாக பிரதி மாதம் வழங்கி டாக்டர் பாரிவேந்தர் அவர்களின் வழிக்காட்டுதலின்படி கூடுதலாக 100 டிஜிட்டல் கேமராக்கள் ரூ.5 லட்சத்து 30 ஆயிரத்திற்கு வழங்கி மேலும் சிறப்பாக சங்க வளர்ச்சி பணிகள் தொடர்ந்து வந்தன.

இரண்டாம் கட்டமாக டாக்டர் பாரிவேந்தர் அவர்களின் தலைமையிலான மாநில பொறுப்பாளர்கள், சங்க அமைப்பு மற்றும் வளர்ச்சி பணிகளுக்காக 2.8.2009 அன்று தர்மபுரி மாவட்டம் - மாரண்டஹள்ளி, கிருஷ்ணகிரி மாவட்டம் - ஒசூர், 19.07.09 அன்று சிவகங்கை - ராமநாதபுரம் மாவட்டம் - தேவக்கோட்டை மற்றும் புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களுக்கு சூறாவளி சுற்றுப்பயணம் சென்றுவந்தார்கள். 02.08.2009 அன்று திருவண்ணாமலை மாவட்டத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பாரி நற்பணி மன்ற கொடி அறிமுகப்படுத்தப்பட்டது. 24.05.2009 அன்று திருச்சியில் மாநில செயற்குழு கூட்டம் நடத்தப்பட்டது. அதற்கு பின்பாக 13-07-2009 அன்று திருச்சியில் மாநில-மண்டல மாவட்ட பொறுப்பாளர்களின் சிறப்பு கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது. அதனை தொடர்ந்து 31.07.2009 அன்று சென்னையில் மாநில-மண்டல-மாவட்ட பொறுப்பாளர்களின் கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது. 23-08-2009, 15-09.2009, 03-10-2009 ஆகிய தேதிகளில் சென்னையில் உயர்மட்டக்குழு கூட்டம் நடைபெற்றது. ஜனநாயக முறைப்படி அதில் சில முக்கிய முடிவுகளும், ஒரு சில புதிய உறுப்பினர்களும் நியமிக்கப்பட்டனர். அதன்பின் 13 - ஜாதி சங்கங்களை சேர்ந்தவர்கள் ஒன்று கூடி ஒரே அமைப்பாக சமூக உரிமைப் பேரவை என ஏற்படுத்தி, அதன் தலைவராக டாக்டர் பாரிவேந்தர் அவர்களை தேர்ந்தெடுத்தனர். அதற்கு முன்பாக திருச்சியில் 05-12-2009 ல் நடைபெற்ற சங்கம்-மன்றம் ஒருங்கிணைந்த மாநில பொறுப்பாளர்களுக்கான செயற்குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி அதற்கான ஒப்புதல் அனுமதி தீர்மானமாக இயற்றப்பட்டது.

மாநில பொதுக்குழு கூட்டத்தின் முன்னோட்டமாக சங்க மாநில பொறுப்பாளர்கள், அந்தந்த மண்டல தலைவர்களுடன் 01-11-2009 முதல் விழுப்புரம் மாவட்டம் உளுந்தூர்பேட்டை, கடலூர் மாவட்டம் வேப்பூர், பெரம்பலூர், அரியலூர், தஞ்சை, திருவாரூர், நாகை, சேலம், கிருஷ்ணகிரி (ஒசூர்), நாமக்கல் ஆகிய மாவட்டங்களுக்கு சுற்றுப்பயணம் செய்து பொதுக்குழு உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தவும்